பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு மார்கழி மீ 14 உ சனிக்கிழமை (29-12-1990) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 33

### அரசு ஏற்றால் பேச்சுக்கும் தயார்:

# காலவரையற்ற போர் நிறுத்தம்;

# விடுதலை புலிகள் நேற்று அறிவிப்பு

## அரசு சமாதானத்தை விரும்புகின்றதா என்பதை உலகுக்குக் காட்ட சந்தர்ப்பம்

### ஆனாலும் படைகள் தாக்கினால் பதில் தாக்குதல் நடக்கும்

யாழ்ப்பாணம், டிசம்பர் 29

நாளை மறுதினம் திங்கட்கிழமை நள்ளிரவு முதல்—அதாவது 1991 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து—காலவரையறை இல்லாத யுத்தநிறுத்தத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தனர்.

சிறிலங்கா அரசாங்கம் சமாதானத்தை விரும்புகிறதா இல்லையா என்பதை உலகம் கண்டுகொள்வதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் முகமாகவே தாம் இந்த ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை மேற்கொள்வதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் யுத்தநிறுத்தத்தை ஏற்றுக்கொண்டால் தாம் பேச்சுவார்த்தை நடத்தவும் தயார் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

யுத்தநிறுத்த காலத்தில் அரச படைகள் தாக்குதல் நடத்தினால் புலிகள் பதில் தாக்குதல் நடத்துவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

இம் மாதம் 31ஆம் திகதி நள்ளிரவிலிருந்து காலவரையற்ற போர் நிறுத்தத்தைக் கடைப்பிடிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்திருக்கிறது. பிறக்கும் புத்தாண்டில் இருந்து சிங்கள ஆயுதப் படைகளுக்கு எதிரான சகல போர் நடவடிக்கைகளும் நிறுத்தப்படும்.

தமிழீழத்தில் சமாதானத்தையும் சகஜ நிலையையும் உருவாக்கும் ஓர் நல்லெண்ண நோக்கத்துடன் ஒருதலைப் பட்சமான முறையில் காலவரையற்ற போர் நிறுத்தத்தை நாம் பிரகடனம் செய்கிறோம்.

ஆனால், அதே வேளை எமது சமாதான முயற்சியை நிராகரித்து, சிறீலங்கா அரச போர் நடவடிக்கைகளை தொடருமாயின் எமது தேசிய விடுதலை இராணுவம் எதிர்த் தாக்குதல்களை நடத்தத் தயங்க மாட்டாது.

தமிழீழ மக்களுக்கு எதிராக யுத்தத்தைத் தொடருவதா அல்லது சமாதானத்தை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அந்தத் தூதுவர் யார்?

கொழும்பு, டிச. 29

ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்கா இந்தியாவுக்குத் தப்பிச் செல்வதற்கு முன்னர், கொழும்பில், ஒரு நாட்டின் தூதரைச் சந்தித்தாரா?

இக்கேள்வி கொழும்பு வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அந்தத் தூதர் அடிக்கடி தனது நாட்டிற்கு பயணம் மேற்கொள்பவர் என்று சொல்லப்படுகிறது. [அ-எ]

## சுட்டு கொலை

யாழ்ப்பாணம், டிச. 29

கடந்த 20 ஆம் திகதி மட்டக்களப்பு 40 ஆம் கிராமத்தைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம் [வயது 45] என்ற நபரைச் சுட்டுக் கொன்றதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-6]

## ரூ. 8 கோடி 50 லட்சம் கட்டுநிதி வந்தது!

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ். மாவட்டத்தில் அவசர கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வசதியாக எட்டுக் கோடி 50 லட்சம் ரூபாவுக்கான கட்டுநிதி யாழ்ப்பாண வங்கிகளுக்கு வந்து சேர்ந்துள்ளது.

கொழும்பு சென்றுள்ள யாழ். அரச அதிபர் திரு அன்ரன் அல்பிறட் அங்கு எடுத்த நடவடிக்கைகளை அடுத்து வங்கி மூலம் நிதி அனுப்பப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## 2 வயோதிபர் படுகொலை!

யாழ்ப்பாணம், டிச. 29

மட்டக்களப்பு, வெல்லாவெளி கிராமத்தில் கடந்த சனியன்று ரோந்து வந்த இராணுவத்தினர் 35 ஆம் கொலனிப் பகுதியில் இரு வயோதிபர்களைச் சுட்டுக் கொன்றனர்.

பொ. துரைச்சாமி [80 வயது], பொன்னையா வடிவேலு [62 வயது] ஆகிய இரு வயோதிபர்களே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். (உ-6)

## 5 வீடுகள் தகர்ப்பு

மட்டக்களப்பு மாவட்டம் திருப்பழுகாமம் கிராமத்தைச் சுற்றி வளைத்த படையினர் அங்கு ஐந்து வீடுகளை குண்டு வைத்துத் தகர்த்தனர். பக்கத்தில் இருந்த சில வீடுகளும் இக்குண்டுகளினால் சிறிது சேதமடைந்தன.

வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட போது திடீரென எழுந்த பெரும் சத்தத்தினால் அப்பகுதி மக்கள் பெரும் உளப் பாதிப்புக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## பொலீஸார் 150பேர் ஓய்வு

யாழ்மாவட்டத்தில்கடமையாற்றிய 150 பொலீஸார் சுய விருப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளனர். [உ-3]

## அம்பாறையில் நேற்று 10 படையினர் பலி!

யாழ்ப்பாணம், டிச. 29

அம்பாறைப் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் பத்துப் படையினர் உயிரிழந்தனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வீதிச் சோதனைகளை மேற்கொண்டு, தமிழ் மக்களிடம் இருந்து பெரும் தொகைப் பணம் பறித்துக் கொண்டு வந்த படையினர் மீதே இந்

[3 ஆம் பக்கம் பார்க்க]

# வடமராட்சியில் குண்டுவீச்சு!

# வயோதிபர் பலி! 8பேர் காயம்!!

## பாடசாலை, கட்டடங்கள் பலத்த சேதம்

— உதயன் செய்தியாளர் கே. ஜி. லிங்கம் —

வடமராட்சி, டிச. 29

வடமராட்சியின் கரையோரப் பகுதிகளில் நேற்றுகாலை இரண்டேகால் மணித்தியாலம் இடைவிடாது ஒரே தொடர்ச்சியாக மிகக் கடுமையான விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

கண்மூடித்தனமான அத் தாக்குதல்களால் வயோதிபர் ஒருவர் பலியானார். எட்டுப் பேர் காயமுற்றனர். பல வீடுகள், கடைகள், படகுகள் என்பன சேதமடைந்தன. வல்லை சிவகுரு வித்தியாசாலை பலத்த சேதமுற்றது. தங்கூரமிடப்பட்டிருந்த இரண்டு படகுகள் நீரில் மூழ்கின.

[illegible] காடு, [illegible] நெடியகாடு, ஊறணி, சக்கோட்டை ஆகிய கிராமங்களை கொண்ட பரந்த பிரதேசத்தில், அவ்ரோ, புதிய ரக பொம்மர் விமானங்கள், இரண்டு ஹெலிக்கொப்டர்கள், சீ - பிளேன் என்பன மாறிமாறித் தாக்குதல்களை மேற்கொண்டன. தாக்குதல்களில் காயமுற்றவர்களில் இரண்டுபேரின்நிலை கவலைக்கிடமாக இருந்தது.

நேற்றுக் காலை சுமார் 6.45 மணிக்கு தொண்டமானாறுப் பகுதிக்கு வந்த [illegible] ஹெலிக்கொப்டர்கள் சக்கோட்டை வரை உள்ள பகுதிகளை வட்டமிட்டு, சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பலாலியில் குண்டு வீச்சு பயிற்சியா?

யாழ்ப்பாணம், டிச. 29

பலாலி இராணுவ முகாமின் உள்ளகப் பகுதிகளில் பொம்மர், மற்றும் அவ்ரோ விமானங்கள் குண்டு வீசும் பயிற்சியில் ஈடுபடுகின்றனவா?

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த சம்பவம் இக்கேள்வியை வலுப்படுத்துகி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 40 லொறிகள் வந்தன; விலைகளும் வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், டிச. 29

கொழும்பில் இருந்து உணவுப் பொருள்கள், மண்ணெண்ணெய் ஆகியவற்றுடன் வந்து - வவுனியாவில் தரித்து நின்ற லொறிகளில் - 40 லொறிகளை வடக்கே வர படையினர் அனுமதித்தனர்.

இதனையடுத்து பொருள்களின் விலை வடக்கில் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

அனுமதிக்கப்பட்ட லொறிகளில் அனேகமானவை ஏற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நேற்று ஒருநாளில் 14 படையினர் மரணம்!

கொழும்பு, டிச. 29

நேற்றுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் 14 பாதுகாப்புப் படையினர் உயிரிழந்தனர்.

— இப்படி கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

அம்பாறையில் நேற்று ஆயு

[2 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றுக்கு சிறுமி பலி

தென்மராட்சி, டிச.29

கடந்த செவ்வாயன்று அனலைதீவில் நீர் நிரம்பியிருந்த கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுமி ஒருத்தி கால் தவறி கிணற்றுள் விழுந்து பலியானார்.

அனலைதீவு ஏழாம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிர்காமன் பிரியா [வயது 5] என்னும் சிறுமியே பலியானவராவார். [உ-117]

## லெபனான் செல்லலாம்

கொழும்பு, டிச.29

லெபனானில் இலங்கையர் வேலை வாய்ப்புப் பெற விதிக்கப்பட்டிருந்த தடையை அரசாங்கம் உடனடியாக நீக்கி விட்டது.

இலங்கையருக்கு அங்கு நிலவும் கிராக்கியை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக தொழில் மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர் ஜி.எம்.பிரேமச்சந்திரா தெரிவித்தார். [அ-எ]

## மன்னாருக்கு கப்பல்

மன்னார், டிச: 29

மன்னாருக்கு உணவுப் பொருள், எரிபொருள் ஆகியவற்றுடன் ''விங்கோ தேட்ஸ்'' கப்பல் கொழும்பிலிருந்து வந்துள்ளது.

''விங்கோ தேட்ஸ்'' கப்பலில் 900 தொன் உணவுப் பொருள்களும் மற்றும் எரி பொருள்களுடன் 500 தொன் உர வகைகளும் வந்து சேர்ந்துள்ளன. [அ-3]

## தபால் பொதி அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிச. 29

எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு செல்லவிருக்கும் ''லங்கா சிறி'' கப்பலில் தபால் பொதிகளும் அனுப்பப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் சேகரிக்கப்பட்டு கடந்த 10 ஆம் திகதி முதல் பருத்தித்துறை தபால் நிலையத்தில் தேங்கிக் கிடக்கும் தபால்களும் அனுப்பப்படவிருக்கின்றன. (உ-3)

## 35 கோடி டாலர் மீளளிக்க உத்தரவு

ஜெனிவா, டிச: 29

காலஞ்சென்ற பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி பெர்டினன்ட் மார்க்கோஸின் பெயரில் சுவிஸ் வங்கியில் உள்ள 35 கோடி டாலர் பணத்தை பிலிப்பீன்ஸ் அரசுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி சுவிஸ் உயர் நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை உத்தரவிட்டது. (உ-எ)

## திருமலை மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ்- பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் திருகோணமலை மாவட்ட மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் ஒரு மணிக்கு பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும் என திருகோணமலை மாவட்ட மாணவர் ஒன்றியம் தெரிவித்தது. [உ]

## 21 பேர் கைது!

யாழ்ப்பாணம், டிச. 29

கடந்த 17 ஆம் திகதி வாழைச்சேனையில் தமிழர்கள் வாழும் பகுதிகளைச் சுற்றி வளைத்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் அங்கு 21 பேரைக் கைது செய்து, மோசமாகத் தாக்கிய பின்னர் அவர்களை பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் என்று கூறப்படுகிறது. [உ]

## 8,000 ஆசிரியர்கள் ஓய்வு பெற விருப்பம்

கொழும்பு, டிச. 29

சுயவிருப்பத் திட்டத்தின் கீழ் சுமார் எண்ணாயிரம் ஆசிரியர்கள் ஓய்வு பெற உள்ளனர். இதனால் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள புதிய ஆசிரிய நியமனங்கள் செய்யப்பட உள்ளன.

கல்வி அமைச்சு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

அதேசமயம் 1991 ஆம் ஆண்டில் ஆங்கில, விஞ்ஞான ஆசிரியர்கள் புதிதாக நியமனம் செய்யப்பட உள்ளனர் என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து ஐந்நூறு ஆக இருக்கும் என்று அதே வட்டாரங்கள் தெரிவித்தன. [இ-எ]

## இலவச பாடநூல்களை இங்கு தருவிக்க முயற்சி

யாழ்ப்பாணம், டிச. 29

வடமாகாண மாணவர்களுக்கு 1991ஆம் ஆண்டுக்குரிய இலவச பாடநூல்களைக் கப்பல் மூலம் கொழும்பில் இருந்து தருவிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாணத்துக்குரிய நூல்கள் - எட்டு லொறிகள் நிறைய - கல்வி அமைச்சின் வெளியீட்டுப் பிரிவிலிருந்து பொறுப்பேற்கப்பட்டு கல்வி இராஜாங்க அமைச்சில் தற்போது வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அங்கிருந்து அவற்றைக் கப்பல்மூலம் தருவிக்கவே தற்போது முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. [உ-3]

## இந்திய அணியை இலங்கை வென்றது!

புவனேஸ்வர், டிச,29

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இந்தியாவை இலங்கை 36 ஓட்டங்களால் தோற்கடித்தது.

ஒரிஸ்ஸா, கட்டாக் நகரில் நேற்று நடந்த இந்த ஒரு நாள் போட்டியில், இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

49.2 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 214 ஓட்டங்களை இலங்கை அணி எடுத்தது.

இந்திய அணி 45.5 ஓவர்களில் சகல விக்கட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. [உ-எ]

## 2ஜே.வி.பி.தலைவர்கள் தெற்கில் கைதாகினர்

கொழும்பு, டிச. 29

தென் பகுதியில் பதினெட்டு கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் இரண்டு ஜே.வி.பி. உயர் மட்ட தலைவர்களை பொலீஸார் கடந்த வாரம் கைது செய்தனர்.

புளத்சிங்கள எனுமிடத்தில் வைத்து கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் தான் எட்டுக் கொலைகளைச் செய்ததாகவும்—

வாதுவை பொலீஸ் பகுதியில் வைத்து கைதான மற்றைய நபர் தான் பத்துக் கொலைகளைச் செய்ததாகவும் ஒப்புக் கொண்டதாக பொலீஸார் தெரிவித்தனர். (உ-எ)

## ஆங்கில ஆசிரியர்கள் 5000 பேர் நியமனமாவர்

கொழும்பு, டிச. 29

அடுத்த ஆண்டில் ஐயாயிரம் ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.

மாவட்ட ரீதியில், இன அடிப்படையில் இந்நியமனங்கள் செய்யப்படும் என்று கல்விச் சேவை ஆணைக் குழுத் தலைவர் ஜோர்ஜ் மென்டிஸ் தெரிவித்தார்.

கடந்த செப்டம்பரில் நேர்முகப்பரீட்சையில் தெரிவான ஆயிரத்து 500 ஆங்கில ஆசிரியர்களுக்கும் அடுத்த மாதம் ஜனவரியில் நியமனங்கள் வழங்கப்படும்.

விஞ்ஞானம், கணிதம் மற்றும் மனையியல் டிப்ளோமா பெற்ற 900 பேருக்கு அடுத்த ஆண்டில் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. [உ-எ]

## வவுனியாவுக்கு வந்த மருந்துகள் கையாடல்!

வவுனியா அரசினர் ஆஸ்பத்திரிக்கு கொழும்பு மருந்துக் களஞ்சியத்திலிருந்து அனுப்பப்பட்ட இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் கையாடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த மருந்து வகைகள் ஆஸ்பத்திரிக்கு வந்து சேர முன்னரே கையாடப்பட்டிருப்பதாக தற்சமயம் தெரிய வந்துள்ளது.

இது குறித்து கொழும்பிலிருந்து மேலதிகாரிகள் சம்பந்தப்பட்டோரிடம் விளக்கம் கேட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## உள்ளூராட்சி ஊழியர்கள்: முன்னைய இடங்களில் பணிபுரிய பணிப்பு

தென்மராட்சி, டிச. 29

கடந்த நவம்பர் மாதம் முதல் தற்காலிக இடமாற்றம் பெற்ற உள்ளூராட்சி ஊழியர்கள் அனைவரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் தமது முன்னைய பணிமனைகளிலேயே கடமையை ஏற்குமாறு யாழ். பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் எஸ். டிவகலாலா அறிவித்துள்ளார்.

போக்குவரத்து கஷ்டம் காரணமாக ஊழியர்களுக்கு அருகில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டது. [உ-117]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், டிச.29

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் வீமன்காமம் பகுதியில் உள்ள இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்துடன் நடந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் வீரமரணமடைந்தார்.

பாலா [இராசையா தவநேசன் - அச்சுவேலி தெற்கு] என்பவரே வீரமரணமடைந்தவராவார். [உ]

## வெட்டிக் கொலை

கடந்த நத்தார் தினத்தன்று மட்டக்களப்பு, திருப்பளுகாமம் கிராமத்திற்கு வந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அங்கு இளையதம்பி தம்பிராசா (60 வயது) என்பவரைக் கைது செய்து, பொது மக்கள் முன்னிலையில் வெட்டியும், சுட்டும் கொலை செய்தனர் என்று கூறப்பட்டது. [உ-6]

## பதவி நீக்கம்

சீனாவின் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சர் வாங் சாங் நேற்று பதவி நீக்கம் செய்யப்பட்டார். (உ-எ)

## பெண்கள் மீது வன்முறை

யாழ்ப்பாணம், டிச. 29

கடந்த 21 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் 40 ஆம் கிராமத்தை கூட்டாகச் சுற்றி வளைத்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், புளொட், டெலோ குழுவினரும் அங்கு 10 பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாகக் கூறப்படுகிறது.

சிறுமிகள் உட்பட பல பெண்கள் கைது செய்யப்பட்டதாகவும்-

12 வயது பாடசாலை மாணவிகள் இருவரும் உட்பட 10 பெண்கள் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்திருந்த இந்தக் கிராம மக்கள், அண்மையிலேயே மீளக் குடியேறியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-6]

## ஒளி விழாவும் நூல் அறிமுக விழாவும்

இன்று சனிக்கிழமை மாலை 3-00மணிக்கு யாழ். ஆஸ்பத்திரிவீதியில் உள்ள தொடர்பகத்தில் ஒளி விழாவும் நூல் அறிமுக விழாவும் இடம் பெறுகின்றன.

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத் தலைவர் திரு. துரை ஆரோக்கிய தாசன் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார். அருள் திரு. எஸ். செ. ஜெபநேசன் நத்தார் செய்தியை வழங்குவார்.

''மரியாயின் மகத்துவம்'' நூல் அறிமுக விழாவும் நடைபெறும்.

யாழ்ப்பாணம்கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. [இ]

## கலைஞர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், டிச. 29

விடுதலைப் புலிகள் கலை கலாச்சாரப்பிரிவும் நிதர்சன ஒளிப்பதிவுச் சேவையும் இணைந்து நடாத்தும் தமிழீழக் கலைஞருக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் வீதியிலுள்ள நாவலர் மண்டபத்தில் நடைபெறும்.

நாடகக் கலைஞர்கள், நடிகர், நடிகைகள். பாடகர்கள் இயக்குநர்கள். நாடக பிரதியாக்குநர்கள், நடனக் கலைஞர்கள் அனைவரையும் பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## நெடுந்தீவில் உணவு பழுதடையும் நிலையில்!

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சகல பகுதிகளிலும் உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. அவற்றைப் பெறுவதற்கு மக்கள் ஆலாய்ப் பறக்கிறார்கள்.

ஆனால் நெடுந்தீவில், பெருந்தொகையான உணவுப் பொருள்கள் எவருக்கும் பயன்படாமல் கிடந்து பழுதடைகின்றன.

நெடுந்தீவுக்கு மூன்று தடவைகள் ''அமேசன்'' கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள்களில் பெரும்பகுதி பழுதடையும் நிலையை அடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து நெடுந்தீவுப் பகுதி மக்களுக்கு அந்த உணவுப் பொருள்களை 3ஆம் 4 ஆம் கட்ட நிவாரணமாக உடனடியாக வழங்குமாறு யாழ். செயலகத்திலிருந்து உத்தரவிடப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. [உ-3]

## ஜே.வி.பி யினரிடமிருந்து ஐந்தரை கோடி ரூபா மீட்பு

ஜே. வி. பி. தலைவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் நகைகளின் பெறுமதி 5 கோடி 30 லட்சம் ரூபா என்று அறிவிக்கப்படுகிறது.

வீடுகள், காணிகளின் பெறுமதி சுமார் 5 கோடி என்றும்- நகைகளின் பெறுமதி 30 லட்சம் ரூபா என்றும் ஜனாதிபதி பிரேமதாஸா வென்னப்புவையில் தெரிவித்தார்.

இப்பணம் மற்றும் உடைமைகள் இளைஞர் நலன்புரித் திட்டங்களைச் செயற்படுத்த பயன்படுத்தப்படும் என்றும் அவர் சொன்னார். [உ-எ]

## வல்லையில் நேற்று ஹெலித் தாக்குதல்!

யாழ்ப்பாணம், டிச. 29

வல்லை வெளிப்பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து வேட்டுக்களைத் தீர்த்தது.

இதனால் அப்பகுதியில் சைக்கிளில் சென்ற சுமார் ஐம்பது பேர் திக்குமுக்காடிப் போயினர்.

பலர் சைக்கிள்களைப் போட்டு விட்டு வல்லைப் பாலத்திற்குள்ளும் புதர்களுக்குள்ளும் ஒளிந்து தப்பினர்.

சிலர் வல்லைக் கோயிலைச் சுற்றி, சுற்றி ஓடி, ஹெலிக்கு மறைந்து தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-6]

### நேற்று ஒருநாளில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய நிலக்கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர், ஒரு பொலீஸார் மற்றும் 4 சிவிலியன்கள் கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மகாலெட்சுமி இராசையா

திருமதி மகாலெட்சுமி இராசையா 28-12-90 நேற்று காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற இராசையாவின் அருமை மனைவியும், திரு. கோபாலசிங்கம் [லச்சலா], சண்முகம்பிள்ளை [வருமானவரித் திணைக்களம், யாழ்ப்பாணம்], காலஞ்சென்ற சிவனேஸ்வரி, நித்தியநகுலேஸ்வரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பாக்கியம், அன்னேஸ்வரி, புஸ்பவதி [பிரான்ஸ்], மகேஸ்ஆனந்தன் [சிங்கப்பூர்] ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹேமலதா, திருச்செல்வம், பிரியதர்ஷினி, விஜயதர்ஷினி, சிவதர்ஷினி, சிவதாரிணி, சிவாநந்தினி, சிவசாந்தினி, சிவானுஜா, பாஸ்கரன் றஜனி, நளினி, நளாயினி, ஷியாமலா ஆகியோரின் பேத்தியும், சர்மிலா, சுதர்சன், றவிதர்ஷன், நிதர்ஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29-12-90 இன்று காலை 11 மணிக்கு கொக்குவில் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:

சி. திருச்செல்வம் [செல்வம்]

பழைய தபால் கந்தோர் ஒழுங்கை,
தலையாளி, கொக்குவில். [15314]

### கணபதி கிருஸ்ணர்

விராங்கொடை தெல்லிப்பழையைச் சேர்ந்த கிருஸ்ணர் 28-12-1990 அன்று காலமானார்.

இவர் காலம் சென்ற மீனாட்சியின் அன்புக் கணவரும், தம்பிராசா, இராசரத்தினம் [ஓய்வுபெற்ற பொறியியலாளர் P.C.C], செல்லத்துரை [கணக்காளர் C.P.C கொழும்பு], பொன்னையா [பிரான்ஸ்], இராசா [உதவி ஆணையாளர் N.H.D கொழும்பு], நடராசா [உத்தரவு பெற்ற நில அளவையாளர், கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசமணி, பவளம், இந்திராணி, இராசமலர், பரமேஸ்வரி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று [29-12-1990] ஒரு மணியளவில் யாழ்ப்பாணம் கன்னாதிட்டி வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சிறீதரன் [பேரன்]

123/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (14889)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### ஓ!கருணாநிதி!!

தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழ்ப் போராளிகள், இப்போது சந்திரசேகர் ஆட்சி வந்தபின்னர் மட்டும் கைது செய்யப்படவில்லை. வி.பி. சிங் ஆட்சிக் காலத்திலேயே அந்த நடவடிக்கை தொடங்கி விட்டது — என்று தமிழக முதல்வர் திரு. கருணாநிதி கூறுகிறார்''!

தமது அரசியல் திருகுதாளம் கெட்டுவிடவில்லை, மழுங்கிப் போய்விடவில்லை என்பதை இப்படிச் சொல்லாமல் சொல்கிறாரோ அவர்?

எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில், 1983 இல், ஈழத்தமிழர்களின் இரட்சகராகக் காட்டிக் கொண்டு, தமது எதிர்க் கட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்த அதே கருணாநிதியா இந்தக் கருணாநிதி என்று கேட்கத்தோன்றுகிறது.

அழகு தமிழில், அலங்கார மொழியில் மேடைப் பேச்சுப் பேசி, அரசியல் கவர்ச்சி சேர்த்த வெறும் அரசியல் வர்த்தகர் தாம் என்பதைக் கலைஞர் காட்டி விட்டார், உலகத் தமிழர்களின் தலைவன் என்ற அளவுக்குத் தம்மால் உயரமுடியாது என்று துலக்கமாகத், துல்லியமாக அவர் நிரூபித்து விட்டார்.

வி. பி. சிங்கின் அரசியல் தோழனாக இருந்தவேளை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா ஈழத்தமிழருக்குச் சார்பான அணுகுமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆலோசனை கூறி அவருக்குச் சரியான திசை காட்டத் திராணி அற்றவராக விளங்கினார்.

இலங்கை இந்தியாவுக்கு அண்டை நாடு; ஈழத் தமிழ்ப் பிரதேசம் தமிழகத்தின் எல்லையில் உள்ள நெருங்கிய உறவு கொண்ட பிராந்தியம். இந்தப் பூகோள அமைப்பில் தமிழர்கள் முழு உரிமைகளுடன் வாழவேண்டியவர்கள். ஆகையால் ஆகக் குறைந்தது தமிழருக்குத் தன்னாட்சி வழங்கக்கூடிய சமஷ்டி அரச அமைப்பையாவது இலங்கை அரசு உருவாக்குவதற்கு, இந்தியா துணைபுரிய வேண்டும் என்று வி. பி. சிங்கிடம் எடுத்துக் கூறக்கூடிய துணிவும், அரசியல் தகுதியும் கலைஞரிடம் இருக்கவில்லை.

அந்தத் துணிவும், தகுதியும் இருந்திருப்பின், வி. பி. சிங் மீது தமக்குள்ள செல்வாக்கைச் சரிவரப் பயன்படுத்தி இருந்தால், சந்திரசேகர் ஆட்சி வந்ததும் இப்படித்தொடை நடுங்கி 'அதிரடி' நடவடிக்கைகளை எடுத்திருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

பதவியைக் காப்பாற்றுவது கஷ்டம் என்றாகிவிட்டதும் கலைஞரின் தமிழ் இனப்பற்று பறந்தோடிவிட்டதா? கொழும்பு அரசுக்கு நிகராக, ஏன் அதனையும் விஞ்சி, ஒருபடி முன்னேறி, போராளிகள் என்ற பெயரில் அங்கு கல்வி பயிலச் சென்ற மாணவர்களையும், அகதிகளாகச் சென்றவர்களையும் கைது செய்து வருகிறார். சந்திரசேகரின் தலைபிள்ளையாவதற்கு மேல திக படையும் கேட்கிறார்!

இவர் உண்மையான திராவிடனாக, தமிழனாக இருந்தால், என்ன செய்ய வேண்டும்? தமது உறுப்பினர்கள் எல்லோரையும் ராஜினாமாச் செய்வித்து, ஈழத்தமிழர் பிரச்சினையை முக்கிய தொனிப் பொருளாக்கித் தேர்தலுக்கு நிற்க வேண்டும். நிச்சயமாகத் தமிழக மக்கள், ஈழத் தமிழருக்கு ஆதரவான கட்சியையே பதவியில் அமர்த்துவார்கள். அப்போது கலைஞர் தாம் உலகத் தமிழரின் ஒரு தேசியத் தலைவர் என்பதை நிரூபிக்க முடியும். தன்மானமுள்ள தமிழ்த் தலைவனாகவும் உயர்ந்து நிற்க முடியும்!

## இப்படியும் நடக்கிறது!

கொழும்பு, டிச.29

கடந்தவாரம் வென்னப்புவவில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாட்டில் கலந்துகொண்ட தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகர் ஒருவர் சிங்களத்தில் பேசினார்!

அவரது பேச்சு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

ஐ. தே. கட்சி இம்முறை புதிய பாணியில் ஏனைய கட்சிகளையும் தனது மாநாட்டுக்கு அழைத்திருந்தது. அந்த அழைப்பை ஏற்று மாநாட்டில் கலந்துகொண்ட கட்சிகளில் பல தமிழ்க் கட்சிகளே! அவற்றில் பெரும்பாலானவை தீவிரவாத இயக்கங்களாக இருந்து சமீபத்தில் அரசியல் கட்சி அந்தஸ்துப் பெற்றவை. (அ-3)

# நிதி நிறுவன வாடிக்கையாளர் நலன் பாதுகாக்க நடவடிக்கை

## அரச மேற்பார்வை அதிகாரி நியமனம்

கொழும்பு, டிச.29

நிதி நிறுவனங்களில் பணம் வைப்புச் செய்தவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக, அவசரகாலச் சட்டவிதிகளை அமுலாக்க அரசு தீர்மானித்து உள்ளது.

அமைச்சரவை இதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது.

நிதி நிறுவனங்கள் சம்பந்தமாக பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் 40 ஆவது பிரிவு அமுல் செய்யப்படவிருப்பதாக மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் நெவில் கருணாரத்தினா தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது:-

ஜனாதிபதியின் சிபார்சின் மீது இதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது: பணம் வைப்புச் செய்தவர்கள், கடன் பெற்றவர்கள் ஆகியோரினதும் மற்றும் தேசிய பொருளாதார நலன்கருதியே அவசரகாலவிதிகள் அமுல் செய்யப்படவுள்ளன.

சில நிதிநிறுவனங்களில் இருந்து பணம் வைப்புச் செய்தவர்கள் தமது பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்வதில் நாட்டம் காட்டி வருகின்றனர். அதனைக் கருத்திற் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

### மேற்பார்வை அதிகாரிகள்

அவசர காலவிதிகளின் கீழ் நிதி நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் நடவடிக்கைகளை மேற்பார்வையிட தனித்தனி அதிகாரிகள் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

இதேவேளை–

வடக்கு. கிழக்குடனும் தமிழர்களுடனும் ஈடுபாடு கொண்ட நிதி நிறுவனங்களுக்குப் –

கொழும்பில் தற்போது துரிதமாகச் சேர்க்கப்பட்டு வரும் நிதி ஒன்றுக்கு பணம் செலுத்த மறுத்து வரும் நிதி நிறுவனங்களுக்கும்–

1988 ஆம் ஆண்டின் நிதி நிறுவனச் சட்டங்களின் கீழ் பதிவு செய்ததற்கான லைசென்சுகளை வழங்காமல் அரச இழுத்தடித்து வருவதாக கொழும்பு வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-எ]

## தண்ணீரை அருந்தியாவது தமிழீழம் மீட்டுத் தருவோம்

### சங்கீதா அஞ்சலிக் கூட்டத்தில் ராஜன்

யாழ்ப்பாணம், டிச. 29

நாங்கள் தண்ணீரை மட்டும் அருந்தியாவது உங்களுக்கு தமிழீழத்தை மீட்டுத் தருவோம்.

யாழ். கோட்டை மோதலில் வீரமரணம் அடைந்த லெப். சங்கீதாவின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ராஜன் இவ்வாறு தெரிவித்தார்.

திருநெல்வேலி சிவஞான வைரவர் ஆலய முன்றலில் இக்கூட்டம் நடைபெற்றது; ராஜன் மேலும் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா அரசு இதுவரை காலமும் விடுதலைப்போராட்டத்தை இராணுவ ரீதியிலேயே அழிக்க முயன்றது.

இறுதியில் அதில் வெற்றி பெற முடியவில்லை.

இந்த நிலையில் பொருளாதாரத் தடைகளை விதித்து அதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.

நாங்கள் மக்களிடம் கேட்பது இதுதான்.

மண்ணை வளம்படுத்தி உணவு உற்பத்தியை மேற்கொண்டு விடுதலைப் போராட்டத்தில் பங்களிக்க மக்கள் முன்வர வேண்டும்–

இப்படி அவர் கூறினார். [இ-6]

## சாவகச்சேரிச் சந்தை குத்தகைக்கு

சாவகச்சேரி நகராட்சி மன்றம் கடந்த 25 வருடங்களாக நிர்வகித்து வந்த சந்தை அடுத்த ஆண்டு குத்தகைக்கு விடப்பட உள்ளது.

மூன்று லட்சம் ரூபாவிற்கு மேலான கேள்விதாரருக்கே குத்தகை வழங்கப்படும் என விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. (இ-117-31)

## இருநாள் ஊதியம் அன்பளிப்பு

குருநகர், டிச.29

தென் தமிழீழ அகதிகள் நிவாரணத்திற்கு, வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச ஊழியர்கள் இருநாள் ஊதியத்தை வழங்கினர். அத்தோடு ஆடைகளையும் வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.

## இலட்சிய வேங்கைகளின் கனவை நனவாக்குங்கள்

### சுன்னாகம் கூட்டத்தில் தினேஷ்

யாழ்ப்பாணம், டிச. 29

மலையே சரிந்தாலும் மனம் கலங்காத – தலைவரின் தலைமையில் ஆயிரமாயிரம் வேங்கைகளாக அணி திரளுங்கள். எஞ்சியோர் துணைக்குத் தோள் கொடுக்க அந்த இலட்சிய வேங்கைகளின் கனவுகளை நனவாக்குங்கள்; எண்ணங்களை செயலாக்குங்கள்; இதுவே அவர்களுக்கு நீங்கள் செலுத்தும் உயர்ந்த அஞ்சலி ஆகும்.

கட்டுவனில் வீரமரணமடைந்த புலிகளுக்கு அஞ்சலி செலுத்தி சுன்னாகம் சந்தைப் பகுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரை ஆற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் தினேஷ் மேற்கண்டவாறு கூறினார்:

அவர் மேலும் கூறியதாவது:-

மரணித்தவர்கள் காலத்தின் காவலர்கள். தமிழீழ காவியத்தின் கதாநாயகர்கள். புரட்சியில் பூத்த புதுமலர்கள். புயலுக்கு அஞ்சா விடுதலை விருட்சங்கள். சாவிற்குச் சவால் விட்டவர்கள். சாவினால் தமிழீழத்தில் புதியதோர் சரித்திரம் படைத்தவர்கள். தாயிலும் மேலாகத் தாய் நாட்டை நேசித்தவர்கள். உயிரிலும் மேலாக உரிமையை நேசித்தவர்கள். இதற்காக உயிரை விலையாகக் கொடுத்தவர்கள்.

உண்மையாக நீங்கள் அவர்களுக்கு அஞ்சலி செலுத்த வேண்டுமானால் அவர்களின் பூதவுடல்களைப் பார்த்து கண்ணீர் வடிக்காதீர்கள். கத்திக் கதறாதீர்கள்.

அவர்கள் செந்நீரில் சபதம் செய்யுங்கள். அவர்களின் இரத்தம் தோய்ந்த ஆயுதங்களை இறுக அணையுங்கள். அவர்கள் எந்த இடத்தில் இயக்கத்தை விட்டுச் சென்றார்களோ அந்த இடத்தில் இருந்து தொடருங்கள்.

இப்படி அவர் கூறினார். (இ-6)

## அரிசிமுடை அபகரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 29

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சவளக்கடை இராணுவ முகாமிலிருந்து மட்டக்களப்பு மாவட்டம் மண்டூருக்கு வந்த இராணுவத்தினர் அங்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அகதிகளுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

த் தாக்குதல் நடத்தப்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலில் பத்துப் படையினர் உயிரிழந்தனர் என்றும்–

ஏனையோர் காயங்களுடன் தப்பிவிட்டனர் என்றும்–

அவர்கள் வந்த லொறி முற்றாகச் சேதமுற்றது என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தமிழ் மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டதாக கூறப்படும் சுமார் 49 ஆயிரம் ரூபா பணமும் பெருமளவு ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ரி-81 ரக துப்பாக்கி -1, அதற்குரிய மகஸின் -2, ரி56-2 ரக துப்பாக்கி -2, ரி56 சொலிட்பட் -1, அதற்குரிய மகஸின் -12, ஜே.ஆர் ரகக் கைக்குண்டு -3, ஐ.எம். ரவைகள் -233, ஏ. கே. ஹோல்ஸர் -3 ஆகியவையே விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன. (உ-6)

# குழந்தையை தூக்கி வந்தவர் மிதிவெடியில் சிக்கி வீழ்ந்தார்!

## வவுனியாப் பயங்கரம் பற்றி மேலும் தகவல்கள்

யாழ்ப்பாணம், டிச. 29

வரம்பு ஒன்றின்வால் நாம் நடந்துசென்றுகொண்டிருந்த போது வாய்க்கால் ஒன்று குறுக்கிட்டது. அதில் முழங்கால் வரைவெள்ளம் நின்றது. எமக்குப் பின்னால் மூன்று வயதுப் பெண் குழந்தையைத் தூக்கி வந்த ஒருவர் வாய்க்காலை இறங்கிக் கடக்காமல் அருகில் இருந்த புதர் ஊடாக கடக்க முற்பட்டார். அப்போது மிதிவெடியில் அவரது பாதம் ஒன்று சிதறியது.

குழந்தை ஒருபுறம் தூக்கி எறியப்பட்டது. புதருக்குள் விழுந்துகிடந்து முனகிக் கொண்டிருந்தவருக்கு உதவ உடனடியாக எவரும் முன்வரவில்லை.

கல்வியங்காட்டைச் சேர்ந்த நிவேதிதன் [27 வயது] என்பவர் தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவத்தை மேற்கண்டவாறு விவரித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

நானும் மற்றும் சிலரும் கடந்த 22 ஆம் திகதி காலை 5.45 ரயிலில் கொழும்பு கோட்டையில் இருந்து புறப்பட்டோம். முற்பகல் 11.00 மணி அளவில் மதவாச்சியை அடைந்தோம். மதவாச்சியில் இருந்து வவுனியா செல்வதற்காக சிங்களவருக்குச் சொந்தமானபஸ்ஸொன்றில் ஏறினோம்.

பூந்தோட்டம் கடந்து தாண்டிக்குளத்தில் எம்மை இறக்கி விடுவதாகக் கூறி 60 ரூபா கட்டணமாகப் பெறப்பட்டது. ஆனால் எமது பஸ் நகருக்குள் கூடச் செல்லவில்லை. அதற்கு முன் உள்ள அகதிகள் தங்கி உள்ள பாடசாலையுடன் நிறுத்தப்பட்டது.

அப்பாடசாலைப் பகுதியிலும், அருகில் உள்ள சர்வோதயப் பகுதியிலும் முப்பதுக்கு மேற்பட்ட லொறிகளும் மூன்று புல்டோசர்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

பகல் 12.00 மணி அளவிலேயே வவுனியா நகருக்குள் செல்ல பொலிஸார் எம்மை அனுமதித்தனர்.

ஊரடங்கு அமுலில் இருப்பதாகக் கூறி, மேற்கொண்டு பயணத்தைத் தொடர அங்கு கடமையில் நின்ற பொலிஸார் எமக்கு அனுமதி அளிக்க மறுத்துவிட்டனர். இதனால் நாம் றம்பைக்குளம் சென்று அங்கு தங்கி இருந்துவிட்டு 24 ஆம் திகதி மீண்டும் வவுனியா நகருக்கு வந்தோம்.

### ஊர்காவலர் கெடுபிடி

ஊரடங்கு அமுலில் இருப்பதால் நீங்கள் போவது புத்தி இல்லை என்று பொலிஸார் மீண்டும் தெரிவித்தனர்.

''நாங்கள் கொழும்பில் இருந்து வந்திருக்கிறோம். அவசர அலுவலாக யாழ்ப்பாணம் போகவேண்டும்'' என்றோம். ''நீங்கள் கொழும்பில் இருந்து வந்தாலும் வயிற்றிலிருந்து வந்தாலும் எங்களுக்குக் கவலை இல்லை'' என்று அங்கு நின்ற ஊர்காவல் படையினர் மிகவும் கடுமையான தொனியில் எங்களுக்குப்பதில் அளித்தனர்.

பின்னர் மீண்டும் றம்பைக் குளம் சென்று 25 ஆம் திகதி காலை வவுனியா நகர் சென்று பிரதானவீதியில் உள்ள இராணுவ காவல் அரணில் படையினரிடம் அனுமதி கேட்டோம். படையினர் அனுமதி அளித்தனர்.

### ஓடு போட்ட வீடு

எம்மை அருகில் உள்ள வீடு ஒன்றில் தங்கவிட்ட பின்னர் போவதற்கு அனுமதித்தனர்: ஆனால் வயலுக்கு உள்ளால் போகக் கூடாது என்று எமக்கு உத்தரவிடப்பட்டது. ஓடு போட்ட வீடு ஒன்றைத் தூரத்தில் காட்டி அதனை நோக்கி நடக்கும் படி எமக்கு கூறப்பட்டது. இராணுவத்தினரின் போக்கில் சந்தேகப்பட்ட நாம் ஏற்கனவே படையினர் சிலர் நடந்து வந்த வரம்பு ஒன்றின் ஊடாக நடக்க ஆரம்பித்தோம். எமக்குப் பின்னால் பலர் வந்து கொண்டிருந்தனர்.

அப்போது மறு பக்கத்தில் இருந்து 15க்கு மேற்பட்ட சைக்கிள்காரர்கள் எமது பக்கம் நோக்கி வந்துகொண்டிருந்தனர். படையினர் அவர்களை எச்சரித்த போது அவர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர்.

நாங்கள் பாதுகாப்புக் கருதி சைக்கிள்காரர்கள் வந்த பாதையைக் குறிபார்த்து நடந்தபோது வரம்பின் [illegible] இடத்தில் ஒரு சிறிய வாய்க்கால் ஒன்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அமுதடி அடைந்த அன்பர்

திருவெம்பாவைத் தினங்களில் தம் சிந்தையில் ஊறி ஊறி நிற்கும் சிவத்தோடு, மாணிக்கவாசகரும் உறைந்து சொல்வது இயல்பேயாம். அறிவால் சிவமேயாய சான்றோர் அருளமுதக் கடலில் தென்படுவது இயற்கையே. திருவாதவூரராய்த் தோன்றி, தென்னவன் பிரமராயனாய் விளங்கி, மாணிக்கவாசகராய் ஆட்கொள்ளப்பட்ட அடிகள் திருவாசகத் தீந்தமிழால் நம்மையும் உய்யக் கொண்டருளி ஆட்கொண்டருளியதால் ஆளுடைய அடிகள் என்ற பெயரையும் பெற்றவர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, இவரை திருவிளையாடற் புராணம் தந்த பரஞ்சோதி முனிவர் அமுதடி அடைந்த அன்பர் என்று குறிப்பிட்டுப் பெருமைப்படுத்தியுள்ளார்.

ஆண்டவனின் அருள் வேண்டி அழுத காரணத்தால் அவர் திருவடி அடைந்த காரியம் சித்தித்தலையை பரஞ்சோதிமுனிவர் பொருள் பொதிந்த வாக்கியங்களால் பொருத்திக் காட்டினார்.

அன்பு, அழுகை, தெளிவு திருவடிப்பேறு, பேரின்பம் அனைத்துக்கும் பாத்திரரானவர் எம்மையும் பாத்திரங்களாக தம் திருவாசகங்களால் வார்த்து எடுப்பவருமாகிய மணிவாசகப்பெருமான் சிவனை நினைந்து

### திருவெம்பாவை சிறப்பம்சம்

நினைந்து திருவாசகத்தால் உருகுவார் உள்ளங்களில் நனைந்து நனைந்து நிற்பவரானார். நெக்கு நெக்குக் உருகி உருகி, வழிபடுவோரின் உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகும் தன்மையும்; உடம்பெல்லாம் கண்ணாய்க் கசிந்து நீர் வெள்ளம் பாயும் நிலையும்; உயிரான மணிவாசகரும் உயிரின் உயிரான சிவமும் ஒன்றாய்க் கலந்ததால் அந்தமொன்றில்லா ஆனந்தம் கிடைப்பது சாத்தியமே.

புலவர்
ஈழத்துச் சிவானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆறு வாரங்கள் நிரம்பிய அழகான ஆண், பெண் பொமனேரியன் நாய்க்குட்டிகள் warmed weaned விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டியது 122, சப்பல்வீதி, யாழ்ப்பாணம். [14884]

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) ''மண்டேலா ரேடர்'' இல: 256 A, பருத்தித்துறை வீதி, நல்லூர்., 'அரஸ் ஜவுளியகம்' 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (15000)

## தட்டெழுத்து நூல்கள்

மிகவும் தேர்ச்சி பெற்றவரால் ஆக்கப்பட்ட பலரின் பாராட்டுதலைப் பெற்ற தமிழ் / ஆங்கில தட்டெழுத்து மற்றும் வேகப்பயிற்சி நூல்கள் விற்பனையாகிறது. S. T. C. A. 149 [37], சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். [15298]

## நாற்றுக்கன்றுகள்

எம்மிடம் சிறந்த இன எலுமிச்சை நாற்றுக் கன்றுகள் விற்பனைக்குண்டு. ஐம்பது நாற்றுகளுக்கு மேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [C/5569]

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாகிலும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 810, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15280)

## தேவை

தமிழ் Typing ஆங்கில Typing இல் தேர்ச்சி உள்ளவர்கள், அலுவலக பையன் தேவை. 02 - 01 - 91 இற்கு முன் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். திறமைக்கு தகுந்த சம்பளம் வழங்கப்படும். Bond Insti-tute 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [15300]

பவடரின் லேபிள் ஒட்டுவதற்கு முன் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. தொடர்பு றோயல் இன்டஸ்றீஸ் பொன்னையா லேன், (ஜொனி ஒழுங்கை) ஆனைக்கோட்டை. (15309)

## மணமக்கள் தேவை

கிறிஸ்தவமதத்தைச் சேர்ந்த 29 வயது ஆங்கில ஆசிரியைக்கும், ஜேர்மனியில் 10 வருடமாக வசிக்கும் 31 வயது மணமகனுக்கும் படித்த, நற்குணமுள்ள மணமக்கள் தேவை. 164, C/o உதயன், யாழ்ப்பாணம். [15301]

## வைத்திய சேவை

சம்பந்தன் வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம் [யாழ். ஆஸ்பத்திரி, பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக, சாந்தி தியேட்டர் அருகே] முன்பு நடைபெற்ற இடத்தில் வழமைபோல் நடைபெறுகின்றது. [15295]

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடித மூலம் தொடர்புகொள்ளவும். S. ஜெயராஜா, 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [15117]

## தாதிப் பயிற்சி

தாதிப்பயிற்சிபெற விரும்புபவர்கள் நேரில் உடன் விண்ணப்பிக்கவும். சென்றல் வைத்தியசாலை, மாதகல் வீதி, பண்டத்தரிப்பு. (15305)

## 5ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி தங்கபூபதி முத்துவேல்

பூவுலகில் : 8-10-1960
இறைவன் அடியில் : 25-12-1985
திதி : 29-12-1990

''கைலை உறை மலை அரசனின் பாத மலரடி பெற்று பூரண நித்ய சாந்தி பெற வணங்குகின்றோம்''

அப்பா, அம்மா, தம்பி, மாமா, மாமி, மைத்துனர்மார், உற்றார், உறவினர்.

'பதி பவனம்', சந்நிதி றோட், உடுப்பிட்டி. [15290]

# வடமராட்சியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டன.

தொடர்ந்து 7:15 க்கு வந்த சீ - பிளேன் ஒன்று இப் பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

ஹெலிக்கொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது வல்வெட்டித்துறைப் பகுதியில் மூன்று படகுகள் சேதமடைந்தன. மற்றும் இரண்டு படகுகள் முற்றாக நீரில் மூழ்கின.

தொடர்ந்து 7.45 மணிக்கு வந்த அவ்ரோவும், 2 புதிய ரக பொம்மர் விமானங்களும் தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, சக்கோட்டைப் பகுதிகளில் பல தடவைகள் குண்டுவீச்சுக்களை நடத்தின.

பொம்மர் விமானத்திலிருந்து இடையிடையே ரொக்கட் மோட்டர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டது.

### தொண்டமானாறில்

தொண்டமானாற்றில் அவ்ரோவிலிருந்து வீசப்பட்ட இரண்டு பீப்பாய்க் குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை.

மற்றையபீப்பாய்க்குண்டில் சிக்கி தொண்டமானாறில் ஆ. வடிவேலு [வயது 95] என்ற வயோதிபர் தலை சிதறிப் பலியானார். அங்கு 2 வீடுகள் பலத்த சேதமுற்றன.

மேலும் எட்டு வீடுகள் சிறிய சேதத்திற்கு உள்ளாகின.

### வல்வையில்

வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற குண்டுவீச்சில்- திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து வந்த விஜயா (வயது 20) என்ற இளம் பெண் படுகாயமுற்றார். அவரின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. மேலும் நான்கு வீடுகள் சிறிய சேதத்திற்கு இலக்காகின.

### நெடியகாட்டில்

நெடியகாட்டில் இடம்பெற்ற குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எஸ். சந்திரசேகரம் (வயது 65), எஸ். உருத்திரகுமார் [வயது 36], எஸ். மலர்விழி [வயது 28] ஆகியோர் காயமுற்றனர். ஆறுமுகதேவன் [வயது 45] என்பவர் படுகாயமுற்றார்.

### ஊறணியில்

ஊறணி வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்ற தாக்குதலில் பலசரக்கு கடை ஒன்றும் ஐந்துபடகுகளும் பெரும் சேதமடைந்தன.

### சக்கோட்டையில்

சக்கோட்டையில் இடம்பெற்ற தாக்குதலில்- மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து, அங்கு தங்கியிருந்த துரைராஜா [வயது 44], அவரது மகள் வசந்தி [வயது 14] ஆகியோரும் மற்றும் ஒருவரும் காயமுற்றனர். ஒரு வீடு சேதமடைந்தது. [அ-உ-15]

# 40 லொறிகள்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கனவே சேரதீவுக்கு வந்து சேர்ந்துவிட்டன.

அவற்றில் இருந்து பொருள்களை இறக்கி வேறு லொறிகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பத்து லொறி பொருள்கள் நேற்று யாழ் வந்து சேர்ந்தன. [உ-3]

# சுாலவரையற்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடைப்பிடிப்பதா என்ற தீர்மானத்தை மேற்கொள்ளும் பொறுப்பு சிறீலங்கா அரசிடம் விடப்பட்டிருக்கிறது. சிறீலங்கா அரசு உண்மையில் சமாதானத்தை விரும்புகிறதா இல்லையா என்பதை உலகிற்கு எடுத்துக் காட்ட நாம் அவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கிறோம்.

எமது போர் நிறுத்தப் பிரகடனத்தை ஏற்று சிறீலங்கா அரசாங்கம் யுத்த நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்ளுமாயின் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவும் விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராக இருக்கிறது.

### இனப்படுகொலை

யுத்தம் என்ற போர்வையில் சிறி லங்கா அரசு தமிழ் மக்களுக்கு எதிராக ஓர் இனப்படுகொலையை நடத்தி வருகிறது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் அகதிமுகாம்களிலும், காடுகளிலும் அவலப்பட்டுவரும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரண உதவிகளை தடுத்து வைத்திருக்கிறது.

போரைச் சாட்டாக வைத்து அரச சார்பற்ற உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள் இப்பகுதிகளுக்குச் செல்லத்தடை விதித்திருக்கிறது.

உலகத்திற்கு தெரியாமல் மௌனமாக தினமும் செத்து மடியும் இம்மக்களின் அவல நிலையை உலகிற்கு எடுத்துக் காட்டவும், அவர்களுக்கு உதவவும் நாம் போர் நிறுத்தம் செய்ய தீர்மானித்துள்ளோம்.

ஒருதலைப் பட்சமாக நாம் பிரகடனம் செய்யும் போர் நிறுத்த அறிவித்தலை சிறிலங்கா அரசு கவனமாகப் பரிசீலனை செய்து உகந்த முடிவை எடுக்குமென நம்புகிறோம்— என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

# பலாலி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

றது.

வியாழக்கிழமையன்று பலாலிப் பகுதியில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட தடவைகள் குண்டுகள் வீசப்பட்டன. ஆனால் அவை வெடிக்கவில்லை.

குண்டுகள் அடுத்தடுத்து வீசப்படுவதை நேரில் கண்ணால் கண்ட சுற்றாடல் கிராமங்களில் உள்ள மக்கள் பதற்றம் அடைந்து இடம் பெயர முற்பட்டனர்.

ஆனால் அந்தக் குண்டுகள் வெடிக்காததாலும், இராணுவ முகாம் பிரதேசத்திற்குள்ளேயே விழுந்ததாலும் மக்கள் வெளியேறும் எண்ணத்தைக் கைவிட்டனர்.

ஒரு குண்டுதானும் வெடிக்காததால், விமானப் படையினர் குண்டு வீசிப் பரீட்சித்துப் பார்த்து, பயிற்சி பெறுவதாக ஊகிக்கப்படுகிறது. [அ-15]


New Science Academy
KANNATHIDY.
92 A/L PHYSICS
LIGHT
By
கணேசன்
ஆரம்பம்: 30 - 12 - 90 Sun 4 p.m (15313)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஆறுமுகம் இராஜரட்ணம்

ஜனனம்: 14 - 7 - 1915
மரணம்: 20 - 12 - 1988
திதி: 29 - 12 - 1990

''ஆண்டு இரண்டு மறைந்தாலும் - உங்கள் நிழல் போன்ற நினைவுகளுடன் வாழ்கிறோம்''

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஐயப்பனைப் பிரார்த்திப்போமாக.

குடும்பத்தினர்

சுருவில்,
ஊர்காவற்றுறை. (15286)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுவர், சிறுமியர் இல்லங்களில் தங்கியிருக்கும்பொழுது தமது சேமிப்பை ஆரம்பித்தவர்களில் சிலர் தமது சேமிப்புப் புத்தகங்களையோ, சான்றிதழ்களையோ இல்லத்திலிருந்து விலகும்பொழுது பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டார்கள்.

இவர்கள் காரியாலய நேரங்களில் தங்கள் பாதுகாவலருடன் வந்து தக்க சாட்சி ஆதாரங்களுடன் தம்மை அறிமுகம் செய்து தமது சேமிப்புப் புத்தகங்களையோ, சான்றிதழ்களையோ பெற்றுக்கொள்ளவும்.

இன்றைய நிலையில் கடிதமூலம் அனுப்பப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்ளவும்.

நன்றி.

தலைவர்
சைவ வித்தியா விருத்திச் சங்கம்.
(சி/5568)


றோயல் தயாரிப்புகள்

றோயல் தயாரிப்புக்களை விற்பனை செய்யும் விற்பனையாளர் கவனத்திற்கு !

இதோ எமது தயாரிப்புக்களான,
- ரெமிக்குறா டல்கம் பவுடர்
- றோயல் ரோஸ் டல்கம் பவுடர்
- தீபா ரோஸ் டல்கம் பவுடர்
- றோயல் குளுக்கோஸ் டீ
- றோயல் அறூட்
- றோயல் பேக்கிங் பவுடர்
- பேபி கொலோன்
- நீலம்

மற்றும் பல.

முகவரி :
றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
[சத்தியதாஸ் [ஜொனி , ஒழுங்கை]
ஆனைக்கோட்டை.

குறிப்பு : உப தபாற் கந்தோருக்கு அருகாமையில் நீங்கள் வரும்போது ஆறுகால்மடம் அடுத்த பஸ் தரிப்பில் இறங்கி எமது முகவரியை விசாரித்து நேரில் வரவும். (15308)


# குழந்தையைத் தூக்கி......

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

காணப்பட்டது.

முன்னால் வந்தநான்வாய்க்காலைக் கண்டதும் சந்தேகத்தில் நின்றுவிட்டேன். பின்னால் குழந்தை ஒன்றைத் தூக்கி வந்த ருவர் வாய்க்காலுக்குள் இறங்காமல் என்னை முந்திக்கொண்டு அருகில் உள்ள புதருக்குள் காலை வைத்தார். அப்போது பலத்த வெடிச் சத்தம் கேட்டது.

### உதவ எவரும் முன்வரவில்லை

மிதிவெடி அதிர்ச்சியில் அவரது கையில் இருந்த மூன்று வயதுப்பெண் குழந்தை தூக்கி எறியப்பட்டது. மிதிவெடியில் சிக்கியவர், பாதம் சிதறிய நிலையில் கீழே கிடந்து முனகிக் கொண்டிருந்தார்.

எனக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தவர்கள் அவருக்கு உதவும் நிலையில் இல்லை எல்லோரும் தாம தப்பினால் போதும் என்ற போக்கில் சென்று கொண்டிருந்தனர்.

கிறிஸ்தவ மதகுரு ஒருவரின் உதவியுடன் காயம் அடைந்தவரைத் தூக்கிக்கொண்டு வரம்பினால் நடந்தேன். காயம் எதுவும் இன்றித் தப்பிய அவரது குழந்தையை மற்றும் ஒருவர் தூக்கி வந்தார். சிறிது தூரம் சென்றபோது மறு பக்கத்தில் இருந்து சிலர் சாக்குடனும், தடிகளுடனும் வந்தார்கள், அவர்களின் உதவியுடன் காயப்பட்டவரைச் சாக்கில் வைத்து தூக்கிச் சென்றோம்.

சுமார் இரண்டு மைல்தூரப் பயணத்தின் பின் நாம் நொச்சிமோட்டையை அடைந்து காயம் அடைந்தவரை அங்கு நின்ற விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தோம். பின்ப அவர் வாகனம் ஒன்றில் எற்றி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார்.

மிதிவெடியில் பாதம் சிதறியவர் செட்டிகுளத்தைச் சேர்ந்த காரியப்பர் (வயது 36) என்பது பின்னர் தெரியவந்தது.

### 2 ஆவது சம்பவம்

காயப்பட்டவரைத் தூக்கிக் கொண்டு நாம் சுமார் கால் மைல் தூரம் வந்த பின்பே இரண்டாவது வெடிச் சத்தம் எமக்குக் கேட்டது.

இந்த மிதிவெடியில் சிக்கிய சைக்கிள்காரர் ஒருவர் தனது இரண்டு பாதங்களையும் இழந்தார் என்று பின்னர் தெரிந்து கொண்டோம்.

இந்த சைக்கிள்காரருக்கும் உதவ எவரும் முன்வரவில்லை என்றும் அவர் நீண்ட நேரம் உதவி இன்றி அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தார் என்றும் பின்பு அறிந்தோம்.

இப்படி அவர் கூறினார்.

இராணுவத்தினர் கூறியது போன்று ஓடு போட்ட வீட்டை நோக்கி நடந்திருந்தால் பயங்கர உயிராபத்துக்கள் ஏற்பட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# அரிசி..

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என வைக்கப்பட்டிருந்த சுமார் நூறு மூடை அரிசியை தமது வாகனங்களில் பலவந்தமாக ஏற்றிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் சடந்த கு யிறன்று இடம்பெற்றது.

சவளக்கடை முகாம் இராணுவத்தினரின் தொல்லைகளினால் சொறிக்கல்முனையிலிருந்து இடம்பெயர்ந்து வந்து, மண்டூரில் தங்கியிருந்த அகதிகளுக்கென வைக்கப்பட்டிருந்த அரிசி மூடைகளே இவ்வாறு ஏற்றிச் செல்லப்பட்டன. [உ-6]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29 - 12 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org